செ.வெ.எண்.51 நாள்.17.10.2017.

திருநெல்வேலி வட்டம், மேலகல்லூரில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 24 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

--------

திருநெல்வேலி வட்டம், மேலகல்லூரில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சிறப்பு மனுநீதி நாள் முகாம் இன்று (17.10.2017) நடைபெற்றது. இம்மனு நீதிநாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். தொடர்ந்து 24 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

தமிழக அரசு பின்தங்கிய தொலைதூர கிராமங்களில் உள்ள மக்களின் சிரமங்களை போக்கும் வகையில் மனுநீதி நாள் முகாம்களை நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்று மனுநீதி நாள் முகாம் நடைபெறுகிறது. ஏற்கனவே, மனுநீதி நாள் முகாமினையொட்டி, 67 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் 30 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 37 மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பல்வேறு துறைகளின் சார்பிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. விவசாயிகளின் பயிர்சாகுபடிக்காக அக்டோபர் 5ம் தேதி அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நெல் பயிர் நடவு செய்யும் ஆரம்பகட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. விவசாயிகள் அனைவரும் நவம்பர் 30ம் தேதிக்குள் கண்டிப்பாக காப்பீடு செய்திட வேண்டும். கடந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டதால் காப்பீடு தொகை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில், 100 வீடுகளுக்கு மேல் கழிப்பறை வசதிகள் இல்லாமல் உள்ளது. இம்மாத இறுதிக்குள் அனைத்து இல்லங்களிலும் கழிப்பறை கட்டும் பணிகளை முடித்து திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத கிராமமாக மாற்றிட வேண்டும். இக்கிராமத்தில் உள்ள பொது சுகாதார வளாகமும் சீரமைக்கப்படும். தற்போது, வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளது. வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களை சுகாதாரமாக பேண வேண்டும். டெங்கு கொசு உற்பத்தியாகமல் தடுப்பதுடன் அனைவருக்கும் விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டுமென என பேசினார்.

இம்முகாமில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.க மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.கணேசன், குடிமைப்பொருள் வட்டாட்சியர் திரு.ராதாகிருஷ்ணன் உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.